# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப, (ஓ).

முறையீட்டு மனு எண்; 0069/2017/ந

ஆணை எண்: 147/2017

நாள்: 14/06/2017

திருமதி/செல்வி. எஸ். பரிமளா,
9/150A, ஆலங்காயம் நெடுஞ்சாலை,
நேதாஜி நகர், வாணியம்பாடி,
வேலூர்மாவட்டம் – 635 752. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
வாணியம்பாடி நகராட்சி. – எதிர் மனுதாரர்

## ஆணை

முறையீட்டு மனுதாரர் திருமதி எஸ். பரிமளா என்பவரது 19.04.2017 நாளிட்ட முறையீட்டு மனு 20.4.2017 அன்று வரப்பெற்று எண்.0069/17 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுவில் வாணியம்பாடி நகராட்சி, வார்டு எண்.30ல் உள்ள ஆலங்காயம் நெடுஞ்சாலை, 5வது குறுக்கு மஸ்ஜித் தெரு (நூர மதரசா பள்ளி) சாலை மிகவும் பழுதடைந்துள்ளதாகவும், பலமுறை நகராட்சியில் புகார்கள் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து இம்முறைமன்ற நடுவ 21.04.2017 நாளிட்ட அறிவிப்பாணையின் மூலம் அறிக்கை சமர்ப்பிக்குமாறு வாணியம்பாடி நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. மேலும், 01.06.2017 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகி விளக்கமளிக்குமாறு மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

இதனிடையே வாணியம்பாடி நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.669/17/இ1 நாள்:13.5.2017 வரப்பெற்றது. மேற்படி அறிக்கையில் கீழ்க்கண்டவாறான விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

"மனுதாரர் குறிப்பிடும் இடம் நேதாஜி நகர் தெற்கு பகுதிக்கு செல்லும் தனியாருக்கு சொந்தமான நடை வழி பாதையாகும்.

மேற்படி சாலை சுமார் 18 வருடங்களுக்கு முன்பு பொதுமக்கள் நலன் கருதி நடைபாதையினை சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கப்பட்டதாக தெரிய வருகிறது.

இந்த வழிப்பாதை அமைக்கப்பட்ட போது ஆலங்காயம் மாநில நெடுஞ்சாலையில் இருந்து பிரிந்து செல்லும் சாலை சுமார் 60 மீட்டர் தூரத்திற்கு மேற்படி பாதையில் இருபுறமும் வீடுகள் அமைந்திருந்ததையடுத்து சாதாரண முறையில் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சுமார் 30 மீட்டர் நீளத்திற்கு நடை வழிப்பாதையில் ஒருபுறம் தனியார் அமைப்பிற்கு சொந்தமான நபா மதர்ஸா உருது பள்ளி சுற்றுச்சுவர் உள்ளது. இதனையடுத்து மனுதாரர் குறிப்பிட்டுள்ள இந்த நடை வழிப்பாதையானது தரை மட்டத்திலிருந்து சுமார் 8 அடி உயரத்திற்கு மேல் தடுப்பு சுவர் அமைத்து சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கப்பட்டுள்ளது. இந்த தடுப்பு சுவர் மழைக் காலங்களில் வெள்ளத்தால் உடைந்துள்ளதால் சாலையும் பழுதடைந்துள்ளது.

மேற்படி நடை வழிப்பாதையானது தனியாருக்கு சொந்தமானதால் நகராட்சிக்கு ஒப்படைக்கும் பட்சத்தில் உரிய அனுமதி பெற்று இச்சாலையினைபொது மக்கள் பயன்படுத்த ஏதுவாக புனரமைப்பு பணி மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ.8.00 லட்சம் மதிப்பீட்டில் சிறுபான்மையினர் துறை நிதியிலிருந்து நிதி பெறப்பட்டதும், இச்சாலை பணியை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்..." தொடர்புடைய ஆவண நகல்களும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

மனுதாரர் 01.06.2017 அன்று நிர்ணயிக்கப்பட்டிருந்த இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு வருகை தரவில்லை. இந்நிலையில் நகராட்சி ஆணையரது அறிக்கையினை ஏற்று மேல் நடவடிக்கையினை கைவிடலாமெனக் கருதி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 14-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

—//ஒப்பம்//—
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

**பெறுநர்**

1. திருமதி/செல்வி. எஸ். பரிமளா,
   9/50A, ஆலங்காயம் நெடுஞ்சாலை,
   நேதாஜி நகர், வாணியம்பாடி,
   வேலூர்மாவட்டம் – 635 752.
2. நகராட்சி ஆணையர்,
   வாணியம்பாடி நகராட்சி,
   வாணியம்பாடி, வேலூர் மாவட்டம் - 635 752.